**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 7/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 5 |
| Name | : | காளிராஜ், வயது 54 |
| Father Name/Husband Name | : | லட்சுமணபெருமாள் |
| Village | : | காலாங்கரைபட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மைக்செட் போடும் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of July 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தோணுகாலில் வசித்து மைக்செட் போடும் வேலை செய்கிறேன். கடந்த 23.08.2022 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த நாராயணன் என்பவரும் வந்து கொண்டிருந்த போது விபத்து நடந்த இடத்திற்கு அருகே போலிசார் நின்று கொண்டிருந்தார்கள்.
2. அந்த இடத்தை எங்கள் முன்னிலையில் படம் வரைந்து இன்னோரு பேப்பரில் எழுதினார்கள். எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் எழுதிய பேப்பரில் கையொப்பம் செய்தேன். அதனை நான் படித்து பார்க்கவில்லை. என்னிடம் தரவும் இல்லை.
3. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)**

1. கடந்த 23.08.2022 ஆம்தேதி காலை 06.00 மணியளவில் நீங்களும் நாராயணன் என்பவரும் கெச்சிலாபுரம் – காலாங்கரைபட்டி சாலையின் இடையே உள்ள எடை மேடை அருகே நின்ற போது அங்கு வந்த கழுகுமலை காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள்

மேற்படி காவல்நிலைய குற்ற எண்.229/2022 வழக்கு சம்பந்தமாக உங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் ஆம்.

2. மேற்படி பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.